தினந்தோறும் சத்துணவு வழங்குவது எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தப்படக்கூடாது என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்தார்கள். அதற்குரிய மேலான யோசனையும், அறிவுரையும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதை அடுத்து சத்துணவு ஊழியர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் எப்படி உணவு நிறுத்தப்படாமல் விடுமுறை வழங்குவது என்ற முதலமைச்சரின் அரிய ஆலோசனையை அவர்களுக்குத் தெரிவித்து ஆலோசனை செய்யப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு சத்துணவு பணியாளர் பேரவை, சத்துணவு அமைப்பாளர் நலச் சங்கம், பால சேவிகாக்கள் சங்கம் ஆகியவை கலந்து கொண்டன. அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினை ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சரின் அரிய ஆலோசனை அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு சத்துணவு பணியாளர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை அளிப்பதென ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவு மைய அமைப்பாளர்களுக்கு இனி எல்லா சனி, ஞாயிறு கிழமைகளிலும் விடுமுறை அளிக்கப்படும். ஆனால் அதே நேரத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற உணவு நிறுத்தப்படாமல் மையத்தில் உள்ள சமையலர், உதவியாளர் ஆகிய இருவரும் மாற்று அடிப்படையில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் ஒருவர் வந்திருந்து உணவைச் சமைத்து வழங்குவார். அதாவது சனிக்கிழமை உணவைச் சமைத்து வழங்குகின்ற சமையலர் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை எடுத்துக் கொள்வார். ஞாயிற்றுக்கிழமை உணவைச் சமைத்து வழங்குகின்ற உதவியாளர் சனிக்கிழமை விடுமுறை எடுத்துக்கொள்வார். எனவே, அவர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் உள்ள 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்களின் 10 ஆண்டுக்கால கோரிக்கை கேட்பாரற்றுக் கிடந்ததை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 72 இலட்சம் குழந்தைகளுக்கு உணவும் நிறுத்தப்படாமல் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

9. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992--93--

மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-93 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான

1992 செப்டம்பர் 23] [பேரவைத் தலைவர்]

கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make further Grants to the Demands for the year 1992-93".

10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992-93 —பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992-93 ஆம் ஆண்டுக்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21—9—1992 ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1992-93 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் " என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

கோரிக்கை :

A. வருவாய்க் கணக்கில் செலவு—

		(ரூபாய் ஆயிரத்தில்.)
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் ..	31,18
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	37,37
11	மாவட்ட நிருவாகம்	55,01
12	தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம்	7,55
13	நீதி நிருவாகம்	1,68